# ஆதரவற்ற பெண்ணின் வீட்டிற்கு மின் இணைப்பு, பட்டா மற்றும் இலவச வீடு: கலெக்டர் நடவடிக்கை



**தூத்துக்குடி.மார்ச்.26.**

உடன்குடிஊராட்சிஒன்றியம்,நயினார்பத்துஊராட்சி அம்மன்புரம் கிராமத்தை சேர்ந்தவர் சத்யபாமா. இவர் தனதுகணவரால் கைவிடப்பட்டநிலையில் இரு குழந்தைகளுடன் தனியாக வசித்து வருகிறார். மகாத்மா காந்திதேசிய ஊரகவேலை உறுதிதிட்டத்தில் வேலை பார்க்கும் சத்யபாமா மகன் 5ம் வகுப்பும்,மகள் 1ம் வகுப்பும் படித்து வருகின்றனர்.

நயினார்பத்து கிராம ஊராட்சியில் உலக தண்ணீர் தினத்தையொட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி. செந்தில்ராஜ், தலைமையில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் சத்யபாமா தனதுவீட்டிற்குமின் இணைப்பு வேண்டி மாவட்டஆட்சித்தலைவர் அவர்களிடம் மனு அளித்தார். மாவட்டஆட்சித்தலைவர் கள் தன் விருப்பநிதியிலிருந்து வைப்புத்தொகை செலுத்தி சத்யபாமா வீட்டிற்கு உடனடியாகமின் இணைப்பு வழங்க சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

மேலும்,அவர் குடியிருக்கும் இடத்திற்கு பட்டாமற்றும் ஊரகவளர்ச்சித்துறை மூலம் இலவசவீடு கட்டுவதற்கான நடவடிக்கையினையும் மேற்கொள்ள சம்பந்த அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்கள். இதையடுத்து சத்யபாமா வீட்டிற்குமின் இணைப்பு மற்றும் பட்டா உடனடியாக வழங்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக சத்யபாமா தெரிவிக்கையில்,

பலஆண்டுகளாக பலமுறைமனு அளித்தும் வீட்டிற்குமின் இணைப்புவழங்கவில்லை. எனவே கிராமசபைக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் மனுஅளித்தேன். ஒரே நாளில் எனதுவீட்டிற்குமின் இணைப்புமற்றும்பட்டாஆகியவை வழங்கப்பட்டது. மனுஅளித்த ஒரேநாளில் அதிரடி நடவடிக்கைஎடுத்த மாவட்டஆட்சித்தலைவர் அவர்களுக்கு எனதுநன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றுதெரிவித்தார்.

# ஜெ.பீ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 12வது பட்டமளிப்பு விழா




**தென்காசி மார்ச்.26**

ஆய்க்குடி அருகே உள்ள ஜெ.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 12 வது பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகத் தென்காசி மாவட்ட ஆட்சியர் துரை.ரவிச்சந்திரன் கலந்து கொண்டு குத்து விளக்கு ஏற்றி பட்டமளிப்பு விழாவைத் தொடங்கி வைத்து,மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கிச் சிறப்புச் செய்தார். ஜெ.பி.குழுமத்தின் நிர்வாக மேலதிகாரி அருட்சகோதரி. லலிதா, நிர்வாகி, அருட்சகோதரி. , ஹேமப்லெட்,நிர்வாக அறங்காவலர் அருட்சகோதரி. ஞான செல்வம்,உயர்கல்வித் துறைப் பொறுப்பாளர் அருட்சகோதரி. சேவியர் செல்வி,ஜெ.பி.குழுமத்தின் தெற்கு மாகாணத் தலைவர். அருட்சகோதரி.சந்தியா மேரி, ஜெ.பி.குழுமத்தின் இயக்குநர். முனைவர். லியோ விஜியஸ், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.ஜெ.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்.முனைவர். மைக்கேல் மரியதாஸ் ஆண்டறிக்கை வாசித்தார்.இந்தப் பட்டமளிப்பு விழாவில் 600க்கும் மேற்பட்ட மாணவர்கள் பட்டம் பெற்றனர்.ஏற்பாடுகளை பேராசிரியர்கள் செய்திருந்தனர்.

# கொடிக்குறிச்சி யு.எஸ்.பி.கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் நுகர்வோர் விழிப்புணர்வு முகாம்

**தென்காசி மார்ச்.26**

கொடிக்குறிச்சி யு.எஸ்.பி.கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் நுகர்வோர் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. முகாமிற்கு கல்லூரியின் நிர்வாகத் தலைவர் செல்வராஜ் தலைமை வகித்தனர். கல்லூரியின் செயலர் சுகாய செல்வமேரி, கல்லூரி முதல்வர் முனைவர் தங்கலெட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரியின் வணிகவியல் துறை உதவி பேராசிரியர் அனுபியா அனைவரையும் வரவேற்றார். இந்துஸ்தான் யுனிலீவர் நிறுவனத்தின் வாடிக்கையாளர் தொடர்பு குழுத்தலைவர் சுஜித்ரா நுகர்வோர் விழிப்புணர்வு குறித்தும், நுகர்வோர் பொருட்களின் பயன்பாடு குறித்தும் பேசினார். நிகழ்வின் முடிவில் விழிப்புணர்வு முகாமில் கலந்து கொண்ட மாணவிகளுக்கு பொருட்களின் தன்மையை அறிந்து கொள்ளும் விதமாக இந்துஸ்தான் யுனிலீவர் நிறுவனத்தின் தயாரிப்புகள் வழங்கப்பட்டது. நிகழ்வை இரண்டாமாண்டு வணிகவியல் துறை மாணவி பூமயில் சரண்யா தொகுத்து வழங்கினார். வணிகவியல் மூன்றாமாண்டு மாணவி அருள்ஜோதி நன்றி கூறினார்.

# ஸ்காட் கல்வி நிறுவனங்கள் சார்பில் விளையாட்டு விழா



**நெல்லை மார்ச்.26.**

சேரன்மகாதேவி ஸ்காட் கல்வி நிறுவனங்கள் சார்பாக விளையாட்டு விழா கொண்டாடப்பட்டது. இதில் ஸ்காட் பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, கல்வியியல் கல்லூரி, ஆசிரியர் பயிற்சி நிறுவனம், தொழிற்பயிற்சி நிலையம், ஸ்காட் சிறப்பு பள்ளி மாணவ, மாணவிகள் சுமார் 2500 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். இவ்விழாவிற்கு ஸ்காட் நிறுவனர் டாக்டர் கிளிட்டஸ் பாபு தலைமை தாங்கினார். தாளாளர் திருமதி. பிரியதர்ஷினி அருண்பாபு முன்னிலை வகித்தனர். ஸ்காட் பொறியியல் கல்லூரி முதல்வர் டாக்டர். ஜஸ்டின் திரவியம் அனைவரையும் வரவேற்றார். அன்வர் ராஜா ஆண்டறிக்கை வாசித்தார். சிறப்பு விருந்தினராக காவல் கண்காணிப்பாளர் PP. சரவணன் திருநெல்வேலி கலந்து கொண்டு சிறப்புரையாற்றி பரிசுகள் வழங்கினார். சிறப்பு அழைப்பாளராக . உதயகுமார் ஆசிய வலுதூக்கும் போட்டியில் பதக்கம் வென்றவரும் விளையாட்டு துறை மூலம் தபால் துறையில் பணியாற்றும் முன்னாள் மாணவரும் கவுரவிக்கப்பட்டனர். இவ்விழாவில் இந்த கல்வி ஆண்டில் தடகள போட்டிகள் ஓட்டு மொத்த சாம்பியன் பட்டம் பெற்ற பொறியியல் கல்லூரி, பாலிடெக்னிக் கல்லூரி, தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கவுரவிக்கப்பட்டனர். உள்விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள், தனிநபர் சாம்பியன் பட்டம், ஒட்டுமொத்த சாம்பியன் பெற்றவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. பின்னர் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், சிலம்பம் நடைபெற்றது. உடற்கல்வி இயக்குனர் திருமதி. அலிஸ் பொன்ராணி நன்றி கூறினார். இவ்விழாவில் ஸ்காட் நிறுவன பொதுமேலாளர்கள் தம்பிதுரை, திருஷ்ணகுமார், கல்லூரி முதல்வர்கள் மணிமாறன், திருமதி. பியுலா, காசி விஸ்வநாதன். நாகராஜன், நிர்வாக அலுவலர்கள் ஜெயபாண்டி ,சித்திரை சங்கர் மற்றும் பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

# குற்றாலம் ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரியில் பட்டமளிப்பு விழா




**குற்றாலம் மார்ச்.26**

குற்றாலம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரியில் பட்டமளிப்பு விழா தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே துவக்கியது. தூத்துக்குடி மண்டல இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் கல்லூரிச் செயலர் அன்புமணி, நிகழ்வினை துவக்கி வைத்தார். கல்லூரி முதல்வர் முனைவர். ஜெயபிரபா சுந்தரி நிகழ்விற்குச் சிறப்பு விருந்தினராக வந்த மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர். அண்ணாதுரையை அறிமுகப் படுத்திப் பேசினார். மேலும், கல்லூரி ஆண்டறிக்கையையும் வாசித்தார். விழாவில் பேசிய சிறப்பு விருந்தினர் முனைவர். அண்ணாதுரை பெற்றோரும் ஆசிரியரும், மாணவர்களுக்கு இரு கண்கள் போல உறுதுணையாக இருப்பவர்கள் என்றும், "ஆசிரியர் என்பவர்கள் ஏணியும் தோணியும் போன்றவர்கள்" ஆசிரியர்கள் இருக்கின்ற அதே நிலையில் பணியாற்றி கொண்டு மாணவர்களின் மேம்பாட்டை நிலைக்கு உயர்த்துபவர்கள். ஆனால்,மாணவர்களோ பல்வேறு நிலைகளில் உயர்ந்து கொண்டிருப்பர் மகாகவி பாரதி கூறிய சாதி, சமய, பூசலற்ற வலிமையான சமுதாயமாக உருவாக மாணவர்கள் பாடுபட வேண்டும் என்று கூறி வாழ்த்தினார். பின்பு, மாணவிகளுக்கு அந்தந்தத் துறைத் தலைவர்கள் முன்மொழிய, இளநிலை மற்றும் முதுநிலை பட்டயச் சான்றிதழ்களை பதிவாளர் முனைவர்.அண்ணாதுரை வழங்கினார். மொத்தம் 1022 பட்டயச் சான்றிதழ்கள் மாணவியர்களுக்கு வழங்கப்பட்டன.

மேலும், இவ்விழாவில் அனைத்துத் துறை தலைவர்கள் மற்றும் கல்லூரிப் பேராசிரியர்கள் கலந்து கொண்டு நிகழ்வை செம்மையாகச் சிறப்பித்தனர்.



**தமிழகத்தில் மகளிரை காவல்துறை பணியில் சேர்த்து 50 ஆண்டுகள் நிறைவு பெற்றதை அடுத்து சென்னையில் இருந்து கன்னியாகுமரி நோக்கி பேரணியில் ஈடுபட்டுள்ள மகளிர் போலீசாரைதூத்துக்குடிமாவட்டஎல்லையானகோவில்பட்டிதோட்டிலோவன்பட்டிபகுதியில் கலெக்டர் செந்தில்ராஜ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாலாஜி சரவணன் ஆகியோர் தலைமையில் வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது. கோவில்பட்டி டி. எஸ். பி. வெங்கடேஷ் மற்றும் காவல் ஆய்வாளர்கள் உதவி ஆய்வாளர்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர்.**

# திமுக உறுப்பினர் சேர்க்கையில் தென்காசி வடக்கு மாவட்டம் முதலிடம் பெற வேண்டும்

## செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் ராஜா பேச்சு



**சங்கரன்கோவில்.மார்ச்.26.**

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் பத்மநாபன் தலைமை வகித்தார். தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் குமார் தலைமை செயற்குழு உறுப்பினர் பரமகுரு, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச்செல்வி ,மாவட்ட துணைசெயலாளர்கள் மனோகரன் ,ராஜதுரை, புனிதா முன்னிலை வகித்தனர். நகரச் செயலாளர் பிரகாஷ் வரவேற்றார் . தொடர்ந்து தலைமை தீர்மான குழு உறுப்பினர் சரவணன் தீர்மானங்களை வாசித்தார். இதில் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதியின் நூறாவது ஆண்டு விழாவை ஆண்டு முழுவதும் சிறப்பாக நடத்த வேண்டும் எனவும், வரும் பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு பூத் கமிட்டி அமைக்கும் பணியை துரித படுத்த வேண்டும் எனவும், திமுகவை வலுப்படுத்தும் வகையில் தென்காசி வடக்கு மாவட்டத்தில் புதிய திமுக உறுப்பினர்களை அதிக அளவில் சேர்க்க வேண்டும் எனவும் ,ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் நியமிக்க பட வேண்டிய அணி அ மைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பட்டியலை உடனடியாக வழங்கிட வேண்டும் எனவும், மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் சமூக வலைத்தளங்களில் மற்றும் ஊடகங்களில் தீவிரமாக செயல்பட்டு முதல்வர் செய்து வரும் நலத்திட்ட பணிகளை மக்களை எளிதில் சென்று வழியில் சென்றடையும் வகையில் பணியாற்ற வேண்டும் என தீர்மானங்கள் நிறை வேற் றப் பட் ட ன. தொடர்ந்து பேசிய தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ தமிழகத்தை செதுக்கிய சிற்பி பெரியார், அண்ணா வழியில் வந்த முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்த நாளை 100வது ஆண்டு விழாவை ஆண்டு முழுவதும் சிறப்பாக நலத்திட்டங்கள் வழங்கி கொண்டாட வேண்டும் எனவும், பூத் கமிட்டி அமைக்கும் பணிகளை அனைவரும் துரிதாக செயல்பட்டு முடிக்க வேண்டும் எனவும் ,தற்போது திமுக தலைவர் மாவட்ட செயலாளர் கூட்டத்தில் வலியுறுத்தியதை போல் ஒரு கோடி புதிய உறுப்பினர்களை சேர்க்கும் பணிக்காக முதற்கட்டமாக தென்காசி வடக்கு மாவட்டத்தில் புதிய உறுப்பினர் சேர்க்கையை அதிகப்படுத்தி தமிழகத்தில் தென்காசி வடக்கு மாவட்டத்தில்தான் அதிக உறுப்பினர்கள் சேர்ந்தார்கள் என்ற பெருமையை பெற கடுமையாக உழைக்க வேண்டும் எனவும், சமூக வலைத்தளங்களை தமிழக அரசின் சாதனைகளை அனைவரும் அறியும் வகையில் பயன்படுத்த வேண்டும் எனவும் பேசினார். இதில் ஒன்றிய செயலாளர்கள் கடற்கரை, பெரிய துரை, பூசைபாண்டியன், கிறிஸ்டோபர்,சேர்மத்துரை, வெற்றிவிஜயன்,ராமச்சந்திரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் வேல்சாமி பாண்டியன், தேவா என்ற தேவதாஸ், வெள்ளத்துரை, சாகுல் ஹமீது, சங்கரன்கோவில் மாரிசாமி, பராசக்தி, மகேஸ்வரி ,புளியங்குடி நகர செயலாளர் அந்தோணிசாமி , பேரூர் கழகச் செயலாளர்கள் சிவகிரி டாக்டர் செண்பக விநாயகம், ராயகிரி குருசாமி, வாசுதேவநல்லூர் ரூபி பாலசுப்பிரமணியன், திருவேங்கடம் மாரிமுத்து , விவேகானந்தன்,சுந்தரவடிவேலு மாவட்ட இலக்கிய அணி சுப்பையா, தொமுச மண்டல அமைப்பு செயலாளர் மைக்கேல் நெல்சன், மின்வாரிய தொமுச திட்ட செயலாளர் மகாராஜன், இளைஞரணி சரவணன் , பசுபதிபாண்டியன், திலிப் குமார், வீமராஜ், சுற்று சூழல் அணி அழகுதுரை, நகர துணைச் செயலாளர்கள் கேஎஸ்எஸ் மாரியப்பன் ,முத்துக்குமார் ,சுப்புத்தாய் குட்டி ,கேபிள் கணேசன், வீரா, சிவா, ஜான்சன், முருகன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers 11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352 Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# ஆலங்குளம் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் மாபெரும் தமிழ் கனவு நிகழ்வு



**தென்காசி மார்ச்.26**

மாபெரும் தமிழ் கனவு தென்காசி மாவட்ட மாபெரும் தமிழ் கனவு நிகழ்வு ஆலங்குளம் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் துரை.இரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.ஈரோடு மக்கள் சிந்தனை பேரவை தலைவர் ஸ்டாலின் குணசேகரன், விவேகானந்தா கல்லூரி மெய்யியலாளர் பேராசிரியர் ஆறுமுக தமிழன் அவர்களும் சிறப்புரையாற்றினார்கள் விழாவிற்கு தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். சர்தார் ராஜா பொறியியல் கல்லூரி முதல்வர் நன்றி தெரிவித்தார்.

ஓலைச்சுவடிகளும் காலச்சுவடுகளும் என்கிற தலைப்பில் மாணவச்செல்வங்களிடம் உரை வழங்கிய ஸ்டாலின் குணசேகரன் தமிழ்நாட்டில் இலங்கை யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஆறுமுக நாவலர் தாமோதரம் பிள்ளை

உ வே சாமிநாதய்யர் ஆகியோரின் அரிய முயற்சியால் கண்டெடுக்கப்பட்ட ஏறத்தாழ 5 லட்சம் ஓலைச்சுவடிகள் புத்தகங்கள் இருப்பதாகவும், அவற்றில் 15 விழுக்காடு மட்டுமே நூல்களாக பதிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், மொத்த ஓலைச்சுவடிகளில் 60 விழுக்காடு மருத்துவ ஓலைச்சுவடிகளே எனவும் வருங்காலங்களில் இளம் தலைமுறையினர் ஓலைச்சுவடி ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார் .

மெய்யியலாளர் பேரா.ஆறுமுக தமிழன் கற்ற கல்வியின் மூலம் உலகறிவினை விரிவடைய செய்திட விரிவான உரை வழங்கினார் .விழாவில் அரசு அலுவலர்கள் , பேராசிரியர்கள், மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். முன்னதாக பொதுநூலக புத்தக கண்காட்சி அரங்கில் மாவட்ட ஆட்சியருக்கு ஸ்டாலின் குணசேகரன் தான் எழுதிய தா.ஸ்டாலின் குணசேகரன் நேர்காணல்கள் எனும் புத்தகத்தினை வழங்கி சிறப்பித்தார் .விழாவில் செய்தி மக்கள் தொடர்புத்துறை , நூலகத் துறை, ம ருத் து வத் துறை, தாட்கோ, முன்னோடி வங்கி ,சமூகநலத்துறை ,வேலை வாய்ப்புத்துறை சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டு இருந்தன.

# தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் சார்பில் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி

**தென்காசி மார்ச்.26**

தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் சார்பில் தென்காசி மாவட்டம் இராயகிரியில் வடக்கு மாவட்ட செயலாளர் கராத்தே குமார் தலைமையில் உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக இராயகிரி இந்து நாடார் உறவின் முறை தலைவர் அம்மையப்பன் தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் மற்றும் நாடார் சமுதாய வரலாற்று ஆய்வு ஆசிரியர் ராஜா நாடார் ஆகியோர் கலந்து கொண்டனர் புதிய உறுப்பினர்களுக்கு இராயகிரி இந்து நாடார் உறவின் முறை தலைவர் அம்மையப்பன் அடையாள அட்டையை வழங்கினார் இதனைத் தொடர்ந்து அகரக்கட்டு லூர்து நாடார் தலைமையில் அங்குள்ள பெருந்தலைவர் காமராஜருடைய திருவருட்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் அகரக்கட்டு லூர்து நாடார் பேசும் போது நாடார் சமுதாயத்தின் வரலாற்றை எல்லா ஊர்களிலும் இருக்கின்ற சமுதாய மாணவர்கள் முதல் பெரியவர்கள் வரை சமுதாய விழிப்புணர்வை பணியை திண்ணை பிரச்சாரங்களை போல சமுதாய விழிப்புணர்வு பிரச்சாரங்களை தமிழ் நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பு மேற்கொண்டு வருகிறது இந்த சமுதாய விழிப்புணர்வு பிரச்சாரத்திற்கு அனைத்து உறவின் முறைகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் இந்த நிகழ்ச்சியில் பொருளாளர் சுப்ரமணியன் ஒன்றிய தலைவர் ராஜ் நைனார் பனைவெல்லம் கூட்டுறவு சங்கம் செயலாளர் செந்தமிழ் செல்வன், கணேசன் , மற்றும் நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்

# தூய்மைப் பணியாளரை தற்கொலைக்கு தூண்டிய நபர்களை கைது செய்ய வேண்டும் : சிபிஐ வலியுறுத்தல்

**திருச்செந்தூர் மார்ச்.26-**

உடன்குடி தூய்மைப் பணியாளர் சுடலைமாடன் தற்கொலைக்கு காரணமான ஆயிஷா கல்லாசி, பேரூராட்சி செயல் அலுவலர் பாபு ஆகியோரை கைது செய்ய வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.இது குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டசெயலாளர் பி.கரும்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது

"உடன்குடி நேர்வுநிலை பேரூராட்சியில் தூய்மை பணியாளராக பணியாற்றி வரும் சுடலைமாடன், பணிமூப்பு அடிப்படையில் தூய்மைபணி மேற்பார்வையாளர் பதவிஉயர்வு வழங்க வேண்டும் என பேரூராட்சிதலைவர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் பாபு ஆகியோரிடம் முறையிட்டுள்ளார். பேரூராட்சிதலைவர், தனது மாமியாரும், முன்னாள் பேரூராட்சி தலைவர், ஆயிஷா கல்லாசியை அணுகுமாறு சுடலைமாடனிடம் வலியுறுத்தியுள்ளார்.

அத ன டிப் ப டை யில் தூய்மை பணியாளர் சுடலைமாடன், முன்னாள் பேரூராட்சி தலைவர் ஆயிஷா கல்லாசியை அணுகிய பொழுது, பதவிஉயர்வுக்கு லஞ்சப்பணமக் கேட்டுள்ளார்.

அதற்கு மறுப்பு தெரிவித்ததால் சுடலைமாடனை ஜாதிபெயரை சொல்லி அவதூறாக ஆயிஷா நல்லாசி பேசியுள்ளார். இந்தகுற்ற செய்கைக்கு செயல் அலுவலர் பாபு உடந்தையாக இருக்கின்றார்.

இதனல் மனமுடைந்த சுடலைமாடன் கட ந்த 17ம் தேதிவிஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றுள்ளார். தூத்துக்குடி அரசுமருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த சுடலைமாடன் நேற்று காலை மர ண ம டைந் துள் ளார். தூய்மை பணியாளர் சுடலைமாடன் மரணத்திற்கு காரணமான முன்னாள் பேரூராட்சி தலைவர் ஆயிஷா கல்லாசி அவருக்கு உடந்தையாக இருந்த தற்போதைய பேரூராட்சி தலைவர் மற்றும் செயலக அலுவலர் பாபு ஆகியோர் மீது தற்கொலைக்கு தூண்டுதல், வன்கொடுமை தடுப்பு சட்டம், ஊழல் தடுப்புசட்டம் மூன்று சட்டங்களின் கீழ் பதிவுசெய்து, கைது செய்ய வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது என்றும் தமிழக காவல் துறை அவ்வாறு நடவடிக்கை எடுக்காவிடில் உரிய சட்டங்களின் கீழ் வழக்குபதிவு செய்ய உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்படும் என தெரிவித்துள்ளார்.

# ராஜேந்திரா விஸ்டம் மழலையர், தொடக்கப் பள்ளி ஆண்டு விழா

**சுரண்டை, மார்ச்.26**

சுரண்டை, ராஜேந்திரா விஸ்டம் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளியில் 12 வது ஆண்டு விழா மற்றும் மழலையர்களுக்கான பட்டமளிப்பு விழா நடைபெற்றது. தமிழ்ச்செல்வி அம்மா, பள்ளியின் முதல்வர் பொன்மானோன்யா குத்துவிளக்கு ஏற்றி விழாவை துவக்கி வைத்தனர். குழல்வாய்மொழி அம்மாள் சிவன் நாடார் அறக்கட்டளை நிறுவனத்தின் நிறுவனர் சிவ பபிஸ்ராம், செயலர் சிவ டிப்ஜினிஸ்ராம் நிகழ்ச்சியை வழி நடத்தினர்.தலைமையாசிரியர் முருகராஜ் விழாவை பொறுப்பேற்று நடத்தினார்.மாணவி ஜெசிகா வரவேற்புரை வழங்கினாள்.வில்லுப்பாட்டு, வரவேற்பு நடனமாக சிவ தாண்டவம்,மாறுவேடப்போட்டி,விவசாயத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் நாடகம், பட்டிமன்றம் மற்றும் மாணவர்களின் கண்ணைக் கவரும் நடனம் போன்ற கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றனர்.சிறப்பு விருந்தினராக டிரசர் ஐலண்ட் பள்ளியின் முதல்வர் சமீமா பர்வின் கலந்து கொண்டு கடந்த ஆண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி உற்சாகப்படுத்தினார். மாணவன் ஜெகதீஷ் நன்றியுரையை வழங்கினான்.மாணவிகள் ஆதர்சனா மற்றும் அஸ்விதா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினர் . ஆசிரியைகள் பிரதீபா மற்றும் ஈஸ்வரி விழாவை ஒருங்கிணைத்தனர். தேசிய கீதத்துடன் விழா இனிதே முடிவடைந்தது.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி**

பிரான்சிஸ்,
தபெ. அந்தோணி மிக்கேல்,
கஎண்: 5/78-1, தெற்குதெரு,
கல்லத்திகிணறு கிராமம்,
பரிவல்லிகோட்டை மஜரா,
ஓட்டப்பிடாரம் தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்.
-மனுதார்

எதிர்

வட்டாட்சியர், ஓட்டப்பிடாரம்.
சார்பதிவாளர், கடம்பூர்.
-எதிர்மனுதார்கள்

**அறிவிப்பு**

எனது தாயார் திரேஸம்மாள் என்பவர் கடந்த 10.04.1988. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்து கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கபடுகிறது.

இப்படிக்கு
பிரான்சிஸ்,
மனுதார்.

# திருமங்கலம் பி.கே.என் வித்யாலயா சி.பி.எஸ்.இ பள்ளியில் 10-வது மழலையர் பட்டமளிப்பு விழா




**திருமங்கலம்.மார்ச்.26.**

மதுரை மாவட்டம் திருமங்கலம் பி.கே.என் வித்யாலயா சி.பி.எஸ்.இ பள்ளியில் 10வது மழலையர் பட்டமளிப்பு விழா நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

திருமங்கலம் ஏர்போர்ட் சாலையில் சிறப்புடன் செயல்பட்டு வரும் பி.கே.என் வித்யாலயா சி.பி.எஸ்.இ பள்ளியின் பட்டமளிப்பு விழா நேற்று சிறப்புடன் நடைபெற்றது.

இந்த பட்டமளிப்பு விழாவின் சிறப்பு விருந்தினர்களாக நாட்டாண்மை எம்.பிரசாத் நாடார், திருமங்கலம் பள்ளி மற்றும் வித்யாசாலாவின் பொருளாளர் ஆர்.தனபாலன் நாடார்,பள்ளியின் செயலாளர் பி.டி.என்.ஏ.அசோக் குமார் நாடார் இயக்குநர் கே.நாகரத்தின பிரபாகர் நாடார், எஸ்.சங்கர் நாடார் மற்றும் பள்ளி நிர்வாகிகள் டி.விக்னேஷ்வரன் நாடார், ஆர்.பழனி ராஜ், எஸ்.எஸ். பன்னீர் செல்வம் நாடார், பி.காந்தி நாடார்,முத்துக்கருப்பன் நாடார் ஆகியோர் கலந்து கொண்டு தலைமையேற்று சிறப்பித்தனர்.

பட்டமளிப்பு விழா நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் பள்ளி முதல்வர் கே.காருண்யா சந்திரகலா முன்னெடுத்து நடத்தினார்.

விழாவின் துவக்க நிகழ்வாக சிறப்பு விருந்தினர்கள் குத்து விளக்கேற்றி பட்டமளிப்பு விழாவை தொடங்கி வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து நாட்டாண்மை எம்.பிரசாத் நாடார் பள்ளியின் மழலையர்களுக்கு பட்டம் வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்தார். இதனை தொடர்ந்து சிறப்பு விருந்தினர்கள் அனைவரும் பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டனர்.

# திருமலைக்கேணியில் கார்த்திகை விழா



**நத்தம், மார்,26**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக்கேணியில் உள்ள சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பங்குனி மாத கார்த்திகை பூஜைகள் நடந்தது. இதையொட்டி முருகபெருமானுக்கு பால், பழம், பன்னீர், விபூதி, சந்தனம், தீர்த்தம், தேன், உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும் ,சிறப்பு அலங்காரமும், சர விளக்கு தீபாராதனைகளும் நடந்தது.சுற்றுவட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் வந்து அங்கு புனித நீராடி, கலந்து கொண்டு முருகப்பெருமானை தரிசனம் செய்தனர். சர்வ அலங்காரத்தில் நின்ற திருக்கோலத்தில் சுவாமி பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இந்த விழாவையொட்டி பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் அருகில் உள்ள காமாட்சி மவுனகுருசாமி மடத்திலும் பக்தர்கள் விளக்கேற்றி வழிபாடுசெய்தனர்.

இதைப்போலவே நத்தம்-கோவில்பட்டி கைலாசநாதர் கோவில் உள்பிரகாரத்தில் அமைந்துள்ள தண்டபாணி சன்னதியிலும் பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

# அருப்புக்கோட்டையில் கலை கல்லூரியில் போதை பொருள் விழிப்புணர்வு மாரத்தான் போட்டி

**அருப்புக்கோட்டை மார்ச் 26.**

அருப்புக்கோட்டை தேவாங்கர் கலை கல்லூரியில் போதைப்பொருள் விழிப்புணர்வு மாரத்தான் போட்டி நடைபெற்றது. போட்டியை முதல்வர் பாண்டியராஜன் துணை முதல்வர் ரவிக்குமார் பேராசிரியர்கள் மகேஸ்வரன் உமா ராணி துவக்கி வைத்தனர். கல்லூரியிலிருந்து துவங்கிய மாரத்தான் பேரணி திருச்சுழி எனரோடு புறநகர் சாலை வழியாக மாரத்தான் போட்டி நடைபெற்றது. போதைகளால் ஏற்படும் தீமைகள் அதன் பாதிப்பு குறித்து மாணவர்களுக்கு விளக்கப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை உடற்கல்வி இயக்குனர் ஹரி கிருஷ்ணன், பேராசிரியர் கணேசன் செய்திருந்தனர்.



**முன்னாள் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ராகுல் காந்தியை பாராளுமன்றத்தில் தகுதி நீக்கம் செய்யப்பட்டதை கண்டித்து சிவகாசி காமராஜர் சிலை முன்பாக சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் அசோகன் தலைமையில் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஏராளமானோர் கலந்து கொண்ட போராட்டத்தின் போது தகுதி நீக்கத்தை திரும்ப பெற கோரி கண்டன முழக்கம் எழுப்பப்பட்டது.**



**வெம்பக்கோட்டையில் 2ம் கட்ட அகழ்வாராய்ச்சி பணிகள் விரைவில் துவங்க உள்ள நிலையில் அதற்கான நிலம் தேர்வு செய்யப்பட்டு அதனை சுத்தம் செய்யும் பணிகள் கடந்த மாதம் துவங்கியது. கடந்த ஒரு மாதமாக நடைபெற்று வந்த சுத்தம் செய்யும் பணிகள் நிறைவுற்று 2ம் கட்ட அகழ்வாராய்ச்சிக்கு தயாராகி உள்ளது. எனவே 2ம் கட்ட அகழ்வாராய்ச்சி பணிகள் இன்னும் சில தினங்களில் துவங்க வாய்ப்புள்ளதாக தொல்லியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.**



**இந்திய பல் மருத்துவ சங்க மதுரை கிளை சார்பில் மதுரை ஒத்தக்கடையில் எம்.எஸ். செல்லமுத்து டிரஸ்ட் நடத்தும் சிறப்பு பள்ளியில் பல் மருத்துவ பரிசோதனை முகாம் நடைபெற்றது. இதில் தலைமை மருத்துவர்கள் ரெங்கராஜூ,அமர்நாத், தன்மனம் மற்றும் டாக்டர்கள் பிரபு, பிரபாகர், பிரதீப், சசிக்குமார், செந்தில், வித்யா, நித்யானந்தம் பள்ளி தலைமை ஆசிரியை புவனேஸ்வரி ஆகியோர் இந்த முகாமில் கலந்து கொண்டனர்.**

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம்:

# தேனி மாவட்ட பயனாளிகள் தமிழக முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றி

தமிழக முதல்வர், தமிழ்நாட்டிலுள்ள ஏழை, எளிய மக்களின் நலனை பாதுகாக்கின்ற வகையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் மூலம் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், கலைஞரின் வரும் முன் காப்போம் இன்னுயிர் காப்போம் - நம்மைக்காக்கும்-48, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத்திட்டம் போன்ற பல்வேறு மருத்துவம் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி, ஏழை, எளிய மக்களின் நலனை பாதுகாத்து வருகிறார்.



முன்னாள் முதல்வர் கருணாநிதியால் உயிர் காக்கும் மருத்துவ சிகிச்சைகளை கட்டணமில்லாமல் ஏழை மற்றும் குறைந்த வருவாய் பெறும் பொதுமக்கள் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பெற வேண்டும் என்ற உயரிய நோக்குடன், உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம் 23.07.2009 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதலமைச்சரின் விரிவான மருத்துக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், ஏழை, எளிய குடும்பங்களுக்கு ஆண்டு வருமானம் ரூ.1,20,000-க்கு கீழ் உள்ள ஒரு குடும்பத்திற்கு ஒரு வருடத்திற்கு ரூ.5.00 லட்சம் வரையும், 1090 மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கும், 52 நோய் பரிசோதனைகளுக்கும், அதனோடு தொடர்புடைய 11 தொடர் சிகிச்சைகளுக்கும், 8 உயர் அறுவை சிகிச்சைகளும் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் வரைமுறைபடுத்தப்பட்ட சிகிச்சைகள் அனைத்தும் திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசு ஒரு வரலாற்று சாதனையை நிகழ்த்தி வருகிறது.

அதனடிப்படையில், தேனி மாவட்டத்தில் தேனி அரசு மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை உட்பட 7 அரசு மருத்துவமனைகளிலும், 11 தனியார் மருத்துவமனைகளிலும் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிகிக்சை அளிக்கப்பட்டு வருகிறது. அதன்படி, தேனி மாவட்டத்தில் 2021-ஆம் ஆண்டில் அரசு மருத்துவமனைகளில் 3,201 பயனாளிகளுக்கு ரூ.4.86 கோடி மதிப்பீட்டிலும், 2022-ம் ஆண்டில் 5,354 பயனாளிகளுக்கு ரூ.6.73 கோடி மதிப்பீட்டிலும், 2023-ம் ஆண்டில் தற்போது வரை 1,436 பயனாளிகளுக்கு ரூ.1.84 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் 9,991 பயனாளிகளுக்கு ரூ.13.43 கோடி மதிப்பீட்டில் உயர்தர சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளது.

அதனை போன்று தனியார் மருத்துவமனைகளில் 2021-ம் ஆண்டில் 1,241 பயனாளிகளுக்கு ரூ.2.30 கோடி மதிப்பீட்டிலும், 2022-ம் ஆண்டில் 1,923 பயனாளிகளுக்கு ரூ.2.49 கோடி மதிப்பீட்டிலும், 2023-ம் ஆண்டில் 413 பயனாளிகளுக்கு ரூ.0.48 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் 3,577 பயனாளிகளுக்கு ரூ.5.27 கோடி மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் 13,568 பயனாளிகளுக்கு ரூ.18.70 கோடி மதிப்பீட்டில் உயர்தர சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்று வரும் ஆண்டிபட்டி வட்டத்திற்குட்பட்ட திருமலாபுரம் கிராமத்தைச் சேர்ந்த வள்ளியம்மாள் கூறுகையில்,

எனக்கு திடீரென உடல் நலக் குறைவு ஏற்பட்டு, மருத்துமனையில் சிகிச்சை மேற்கொண்ட போது, எனது இதயத்திலுள்ள குழாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். அதனை சரிசெய்வதற்கு போதிய பண வசதியில்லாமல் கஷ்டமான சூழ்நிலையில் இருந்து வந்தேன்.

இந்நிலையில், தேனி அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, முதலமைச்சரின் விரிவான மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மருத்துவர்கள் ஆஞ்சியோ கிராம் சிகிச்சை அளித்து வருகிறார்கள்.



இதுவே தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை மேற்கொண்டிருந்தால் ரூ.80,000-த்திற்கு மேல் செலவு ஆகியிருக்கும். ஒரு தனியார் மருத்துவமனையில் எந்த அளவிற்கு வசதிகளுடன் சிகிச்சை அளிப்பார்களோ அதைவிட சிறப்பாக தேனி அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையில் முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் எனக்கு சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

இதன்மூலம் தற்போது நான் நல்ல முறையில் சிகிச்சை பெற்று ஆரோக்கியத்துடன் உள்ளேன். எங்களைப் போன்ற ஏழை, எளிய மக்களின் நிலையினை கருத்தில் கொண்டு, மருத்துவம் சார்ந்த திட்டங்களில் குறிப்பாக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தினை செயல்படுத்தி தமிழ்நாட்டு மக்களின் உற்ற தோழனாக திகழ்ந்து வருகின்ற தமிழக முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

வீரபாண்டி கிராமத்தைச் சேர்ந்த போதிராஜா கூறுகையில்,

நான் கூலி வேலை செய்து அதனைக் கொண்டு எனது குடும்பத்தினை பராமரித்து வருகிறேன். எனக்கு நீண்ட நாட்களாக முதுகு தண்டுவடத்தில் வலி இருந்து வந்தது, இதற்கான மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்றால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்கு ரூ.1.00 இலட்சத்திற்கு மேல் செலவு ஆகும் எனக் கூறினார்கள். என்னிடம் போதிய வசதி இல்லாத காரணத்தினால் என்ன செய்வதென்று திக்கற்று இருந்த போது, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் குறித்து அறிந்து, அதனைக் கொண்டு தேனி அரசு மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறேன்.



தனியார் மருத்துவமனைகளில் கூட இந்த அளவிற்கு சிகிச்சை அளிப் பார் களா என எனக்கு தெரியவில்லை அந்த அளவிற்கு தேனி அரசு மருத்துவக் கல்லூரி, மருத்துவ மனையில் எனக்கு முதுகு தண்டு வடத் திற் கான சிகிச்சை அளித்தார்கள்.

இதன் மூ லம் நான் தற்போது நல்ல நிலையில் ஆரோக்கியத்துடன் உள்ளேன். எங்களை போன்ற ஏழை, எளிய மக்களின் நிலையை கருத்தில் கொண்டு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்டத்தினை செயல்படுத்தி தமிழ் நாட்டு மக்களின் உயிர்காக்கும் பாதுகாவலனாக திகழ்ந்து வருகின்ற தமிழக முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.



முன்னாள் முதல்வர் கருணாநிதி காட்டிய வழியில் செயல்பட்டு வருகின்ற தமிழக முதல்வர் ஏழை, எளிய மக்களுக்கு தரமான மருத்துவச் சேவையினை தங்கு தடையின்றி வழங்கி, நோயற்ற வாழ்க்கை வாழ்வதற்கு தேவையான மருத்துவம் சார்ந்த திட்டங்களை தீட்டி சிறப்பாக செயல்படுத்தி, ஏழை, எளிய மக்களின் நலனை பாதுகாத்து வருகிறார். அதனடிப்படையில், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நோய்நொடியற்ற வாழ்வினை அளித்து பிற மாநிலங்களுக்கு முன் உதாரணமாக தமிழகம் திகழ்ந்து வருகிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை என்பதே தேனி மாவட்டத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்றவர்களின் எழுச்சிமிகு கருத்தாக உள்ளது.

**தொகுப்பு:-**
**சு.ஜெகவீரபாண்டியன்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தேனி மாவட்டம்.**

# விருதுநகர்: கார் விபத்தில் பெண் பலி ரூ.96 லட்சம் இழப்பீடு

**விருதுநகர் மார்ச் 26.**

கார் விபத்தில் பலியான விருதுநகரைச் சேர்ந்த அனிதா செண்பகவல்லி 42, குடும்பத்திற்கு ரூபாய் 96 லட்சம் இழப்பீடு வழங்க ஸ்ரீவில்லிபுத்தூர் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விருதுநகர் சத்திர ரெட்டியார்பட்டியை சேர்ந்தவர் சந்திரமோகன் மனைவி அனிதா செண்பகவல்லி டிரேடிங் கம்பெனி நடத்தி வந்தார். 2019 ஜூன் 5 திருக்கடவூர் சிவன் கோவிலுக்கு அனிதா செண்பகவல்லி மற்றும் மற்றும் குடும்பத்தினர் சாமி தரிசனம் செய்துவிட்டு காரில் ஊருக்கு திரும்பினர். தஞ்சாவூர் மானாமதுரை பைபாஸ் ரோட்டில் தெனமா பட்டு கண்மாய் கரை ரோட்டில் கார் விபத்துக்குள்ளானது. இதில் அனிதா செண்பகவல்லி உயிரிழந்தார். அவரது குடும்பத்தினர் இழப்பீடு கோரி ஸ்ரீவில்லிபுத்தூர் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தனர். வழக்கை விசாரித்த நீதிபதி பூரண ஜெய ஆனந்த் அனிதா செண்பகவல்லி குடும்பத்திற்கு விருதுநகர் நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி 96 லட்சத்து 97 ஆயிரத்து 240 ரூபாய் இழப்பீடு வழங்க உத்தரவிட்டார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# இந்தியன் இன்ஸ்டியூட் ஆப் பப்ளிக் அட்மினிஸ்ட்ரேஷன், மற்றும் அமேசான் இந்தியா புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன

**சென்னை, மார்ச் 26-**

இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் பப்ளிக் அட்மினிஸ்ட்ரேஷன் (IIPA) மற்றும் அமேசான் இந்தியா இன்று பல கூட்டு முயற்சிகளில் ஒத்துழைப்பை ஆராய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டன. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்கள், ஆன்லைன் நுகர்வோருக்கு அவர்களின் உரிமைகள் குறித்தும், பாதுகாப்பான ஷாப்பிங் நடைமுறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், மோசமான செயல்களில் இருந்து ஆன்லைன் கடைக்காரர்களைப் பாதுகாப்பதற்கும் ஒத்துழைக்கஒப்புக்கொண்டனர்.

நுகர்வோர் ஆய்வு மையம் மூலம் IIPA உடன் இணைந்து பணியாற்ற அமேசான் உற்சாகமாக உள்ளது. பாதுகாப்பான ஷாப்பிங் சூழலை உருவாக்குவது, எங்கள் சந்தையில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வெல்வதற்கும் தக்க வைத்திருப்பதற்கும் இன்றியமையாத அங்கமாகும். இந்த திசையில் முன்னேற, IIPA போன்ற ஒத்த எண்ணம் கொண்ட நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், அமேசான்மட்டுமின்றி, ஒட்டுமொத்த இணைய வழித்துறைக்கும், ஆன்லைன் ஷாப்பிங் செய்பவர்களுக்கு இன்னும் பாதுகாப்பான மற்றும் நம்பகமான அனுபவத்தை வழங்குவதற்கு ஒரு முக்கியமான மைல்கல்லாக இருக்கும் என்று நம்புகிறோம் என்று அமேசான் இந்தியாவின் பொதுக் கொள்கையின் துணைத் தலைவர் சேத்தன் கிருஷ்ணசாமிகூறினார்.

# சி.எப்.ஏ.இன்ஸ்டிடியூட் கோயம்புத்தூரில் ஒரு புதிய தேர்வு மையத்தைத் திறக்கிறது

**கோவை, மார்ச் 26-**

நிதித் துறையில் சிறந்து விளங்கும் புரொஃபஷனல் அமைப்பான சி.எப்.ஏ. இன்ஸ்டிடியூட், நவம்பர் 2023 - ல் நடைபெறவிருக்கும் சி.எப்.ஏ.தேர்வுகளுக்கான மாணவர் சேர்க்கைகளைத் தொடங்கியுள்ளது. CFA புரோகிராமிற்கான தேவை அதிகரித்து வருவதால், மாணவர்கள் எளிதாக அணுகுவதற்கும், அவர்களின் வசதியை மேம்படுத்துவதற்கும் இந்த இன்ஸ்டிடியூட், கோயம்புத்தூர், நாக்பூர், நொய்டா, ராய்ப்பூர், ராஞ்சி, சூரத் மற்றும் விசாகப்பட்டினத்தில் ஏழு புதிய தேர்வு மையங்களைச் சேர்த்துள்ளது. பிப்ரவரி 2023 இல் நடைபெற்ற தேர்வுகளின்போது தொடங்கப்பட்ட நான்கு புதிய தேர்வு மையங்களைத் தவிர இந்த ஏழு மையங்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளன, இதனால் இந்தியா முழுவதும் மொத்த தேர்வு மையமையங்களின் எண்ணிக்கை 23 ஆகவும், உலகளவில் 400 க்கும் அதிகமாகவும் அதிகமாகியுள்ளது.

CFA புரோகிராம் என்பது நிதி மற்றும் முதலீட்டு நிர்வாகத்தில் அனைவராலும் விரும்பப்படும், வேலைக்குத் தேவைப்படும் ஒரு புரொஃபஷனல் தகுதியாகும். CFA இன்ஸ்டிடியூட் நாடு முழுவதும் இருக்கும் மாணவர்கள் அவர்களின் வாழ்க்கையில் கொண்டுள்ள இலக்குகள் மற்றும் வேலையில் கொண்டுள்ள இலக்குகளை அடையச் செய்து, அவர்களுடைய தொழில்முறை வளர்ச்சி பயணத்தை தொடர்ந்து மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது தேர்வுகளை எழுதுவதற்கும், பயணச் செலவுகளைக் குறைக்கவும், இன்வெஸ்ட்மென்ட் மேனேஜ்மென்ட் புரொஃபஷனல்ஸாக இருக்க விரும்புவோருக்கு இந்த திட்டத்தை மேலும் எளிதாக பெறக்கூடியதாக மாற்றவும் உதவும் என்று CFA இன்ஸ்டிடியூட்டின் இந்தியத் தலைவர் ஆரத்தி போர்வால் கூறினார்.

